**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 4, தூத்துக்குடி**
**முன்னிலை : திரு. V.C. குபேரசுந்தர், M.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண் 4,**
**தூத்துக்குடி**

**2022 ம் ஆண்டு ஜூலை திங்கள் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 1441/2017**

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>அனைத்து மகளிர் காவல்நிலையம்,<br>குற்ற எண் 14/2004<br>U/s. 467, 468, 471, 420, 120(B) IPC | .... குற்றமுறையீட்டாளர் |
| **/எதிரிடை/** | |
| அதிசயமணி,<br>த/பெ. துரைராஜ் நாடார்,<br>M.சவேரியார்புரம், தூத்துக்குடி | ....எதிரி |

**<u>உத்தரவு</u>**

வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கானது முதலில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 118/2012 என 06.09.2012 ம் தேதி நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணையில் இருந்த போது, மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தூத்துக்குடி அவர்களின் ஆணை எண். A1 No. 953/2017 Dated 17.04.2017 ம் தேதியன்று நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, சி.சி. எண் 1441/2017 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணையில் இருந்த போது, மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் ஆணை எண் 2977/2019, 06.12.2019 ம் தேதியிட்ட உத்தரவின் பேரில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

2. **இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டும், எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் பிணையில் விடக்கூடாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டும், பல வருடங்களாகக எதிரி ஆஜராகாததால், எதிரியை தலைமறைவு எதிரியாக அறிவிக்க அறிவிப்பு அனுப்பப்பட்டு, எதிரி குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்று கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்றும்,** எதிரி எங்கு இருக்கிறார் என்று அரசு தரப்பில் கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்ததால், எதிரியை தலைமறைவு எதிரியாக அறிவித்து, குவிமுச பிரிவு 299 ன் படியான விசாரணைக்காக சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. இவ்வழக்கின் புகார்தாரர் பாஸ்கரன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.1 தன் சாட்சியத்தில் எதிரி தற்சமயம் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. கடந்த 2004ம் வருடத்தில் பழக்கடை நடத்திக் கொண்டிருக்கும் போது எதிரி அ.சா.1க்கு பழக்கமாகி, சாத்தான்குளம் பகுதியில் பழத்தோட்டம் வைப்பதற்கு இடம் உள்ளது என்று சொன்னதால் ரூ.5 லட்சம் அட்வான்ஸ் தொகை கேட்டதாகவும், அதன்படி ரூ.5 லட்சத்தைக் கொடுத்தி எதிரி பவர் பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும், அந்த பத்திரமானது விஓசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் சாத்தான்குளம் பகுதியில் இடம் பார்க்க சென்றதாகவும், அப்போது அங்கு உள்ள மக்கள் இங்கு உங்கள் இடம் கிடையாது, சாத்தான்குளம் VAO அலுவலகத்திற்கு சென்று கேட்டதாகவும், அப்போது அந்த சான்றிதழில் உள்ள முத்திரை, கையெழுத்து தனக்குரியது இல்லை என்று சொல்லிவிட்டதாகவும், அதன்பிறகு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4. எதிரி தலைமறைவாகி விட்டதாலும், அ.சா.1 புகார்தாரருக்கும் எதிரி எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கு 31 ஆண்டுகளாக வழக்கானது நிலுவையில் இருப்பதாலும், எதிரியை இந்நீதிமன்றத்தில் பிடிகட்டளையை நிறைவேற்றி அரசு தரப்பில் ஆஜர்படுத்த இயலாத காரணத்தினாலும், இவ்வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாமல் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருவதால், இவ்வழக்கை நீண்டகால பட்டியல் வழக்காக மாற்ற உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2023ம் வருடம் ஜூலை மாதம் 11 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்./V.C.குபேரசுந்தர்,**
**நீதித்துறை நடுவர் எண் 4,**
**தூத்துக்குடி.**